UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)
ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)
19 - 4 Oct - Dec 2025
Published on 14, Oct-Dec 2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# சம்பூத்துமலை பழங்குடி மக்களின் நம்பிக்கைகள்

**முனைவர் வே. ரேகா**
மொழிகள் துறை - தமிழ்ப்பிரிவு
கற்பகம் உயர்கல்விக்கழகம், கோவை - 641021

**ஆய்வுச்சுருக்கம்**

மக்களின் பண்பாட்டினை அறிய அவர்களின் வாழ்வியல் நிலைகளை கூர்ந்து கவனித்தல் இன்றியமையாதது. ஆதிகுடிகளிடம் இன்றுவரை தங்கள் வாழ்வியல் சடங்குகளின் வழியாகவும், நம்பிக்கைகளின் வழியாகவும் தம் வாழ்வியலை உயிர்ப்புடையதாக வைத்துள்ளனர். மலைகளில் வாழும் இவர்கள் தங்கள் வாழ்வியலில் நம்பிக்கை வழியிலான வாழ்முறைக்கு அதிகமானதோர் முதன்மையளித்து வருகின்றனர். அவ்வகையில் சம்பூத்து மலை பழங்குடி மக்களின் வாழ்க்கையில் நம்பிக்கை சார்ந்த பழக்கங்கள் அவர்கள் வாழ்வியலோடு தொடர்புடையதாகவும், அவர்களின் தனித்த பண்பாட்டினை விளக்குவதாகவும் அமைந்துள்ளது.

**திறவுச் சொற்கள்**

சகுணம், மரணம்சார் நம்பிக்கை, மரம்சார்ந்த நம்பிக்கை, ஆவிகள், நம்பிக்கை.

**முன்னுரை**

சம்பூத்துமலை காடுகள் சூழ்ந்த மலைப்பகுதியாகும். இப்பகுதியைச் சார்ந்த நிலப்பகுதிகளில் மக்கள் பரவலாக வாழ்ந்து வருகின்றனர். மலையில் வாழக்கூடிய மக்களைப் பழங்குடியினர் என அழைக்கின்றனர். மனிதனின் தொன்மையான வாழ்க்கை, காடும் காடு சார்ந்த இடமுமாகும். பழந்தமிழில் கூறப்படும் திணை வாழ்க்கையானது தொல் தமிழரின் வாழ்க்கை முறையினைக் காட்டுகின்றது. அறிவியல் வளர்ச்சியில் பின்தங்கிய நிலையில் இயற்கையோடு இயைந்த வாழ்நிலை கொண்ட மக்கள் பழங்குடியினர் என அழைக்கப்பட்டனர். இத்தொல்குடி மக்கள் தமிழகமெங்கும் பரவிக் காணப்படுகின்றனர். குறிப்பாக மலைவாழ் மக்களின் வாழ்வியலும் சுற்றச்சூழலும் மானுடவியல் ஆய்வில் பெரிதும் ஆராயப்பட்டுள்ளமைக் குறிப்பிடத்தக்கதாகும். இதன் அடிப்படையில் சம்பூத்துமலை என்பது சேலம் மாவட்டத்திற்கு அருகேயுள்ள ஒரு பகுதியாகும். இங்கு 90 குடும்பங்கள் வாழ்கின்றனர். சம்பூத்துமலையில் மலையாளி இனப்பழங்குடிகள் தொன்றுதொட்டு வாழ்ந்து வருகின்றனர். இத்தகைய தொல் பழங்குடி இன மக்களையும் அவர்களது பிரிவையும் இம்மக்கள் வாழும் வாழ்க்கை அமைப்பு மற்றும் சுற்றுச்சூழல் வளர்ச்சியையும், வளர்ச்சியில் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும் அவர்களின் பழக்கவழக்கங்களையும் நம்பிக்கைகளையும் பற்றி இக்கட்டுரை விளக்குகிறது.

பழங்குடி மக்களின் நிலையிலிருந்து மனிதன் நாகரிமடைந்தாலும் பழங்குடி மக்களின் மனநிலை அவனை விட்டுப் போகவில்லை. பழங்கால மனிதன் தன்னைச் சுற்றி ஏதாவது நிகழ்வுகள் நடந்தால் காரணங்கள் கண்டுபிடிக்க இயலாத நிலையில் இருந்தான். பின்னர் இயற்கையைக் கட்டுப்படுத்த விரும்பி செய்வினையில் ஈடுபட்டான். செய்வினை ஆதிக்கம் குறைந்த சமுதாயத்தில் செய்வினை பற்றிய நம்பிக்கைகள் நாட்டுப்புற நம்பிக்கைகளாக மாறின (சு.சக்திவேல், நாட்டுப்புறவியல் ஆய்வு,ப.184) என்று சு.சக்திவேல் நாட்டுப்புற

ஆய்வு என்னும் நூலில் குறிப்பிடுகிறார்.

சமுதாயம் தனிமனிதர்களின் கூட்டமைப்பாக அமைவதாகும். சமூகத்திலுள்ள அனைத்து மக்களின் பண்பின் மொத்த உருவமாகச் சமூகம் காணப்படுகிறது. ஒவ்வொரு தனி மனிதனின் நடத்தையும், சமூகத்தைப் பாதிக் கின்றது. அத்தகைய சமூகப் பண்பைத் தனி மனிதனிடமிருந்து அறிய முடிகிறது.

"ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழும் மக்கள் இனத்தைச் சமுதாயம் எனலாம். சமுதாயம் ஓர் இனத்தை அல்லது நாட்டிலுள்ள உலக மக்கள் அனைவரையும் குறிப்பதாக இருக்கிறது. தமிழ்ச் சமுதாயம் பாரதச் சமுதாயம், மனிதச் சமுதாயம் என்று சொன்னால் பொருள் எல்லைகள் விளங்கும்." (அ.ம.சத்தியமூர்த்தி, தமிழ் நாட்டுப்புறக் கதைகள், ப.182) என்று சமூகத்திற்குரிய பண்பு அமைவதை அ.ம. சத்தியமூர்த்தி தமிழ் நாட்டுப்புறக் கதைகள் என்னும் நூலில் குறிப்பிடுகிறார்.

சமுதாயம் என்னும் சொல்லிற்கு மக்களின் திரள் என்னும் பொருளினைத் தமிழ்ப் பேரகராதியும் சொற்களஞ்சியமும் தெரிவிக் கின்றன. சமுதாயம், பண்பாடு, அறிவியல், அரசியல், நாட்டுப்பற்று முதலியவற்றின் அடிப்படையில் சேர்ந்து செயல்பட்டு வாழும் மக்கள் கூட்டத்தினையே சமுதாயம் என அறிஞர் பொதுவாகக் கூறுவர்.

மனிதன் தன் இனத்துடன் இணைந்தும் பிணைந்தும் வாழும் இயல்புடையவன். அவன் கூடிக் கலந்து வாழ்வதில் சமூகம் உருவாகிறது. (மேலது, ப.135)

**சகுணம்**

எந்த ஒரு செயலைத் தொடங்கும் போதும் ஒரு பணிக்காக புறப்படும்போதும் "நல்ல வார்த்தை கேட்பது" மக்கள் வழக்கில் காணப்படும் நம்பிக்கையாகும். தொல்காப்பி யரும் இதனை "பாக்கத்து விரிச்சி" (தொல். பொருள், பே.58) என்று குறிப்பிடுகின்றார். அவ்வாறே நற்குறி கேட்டலில் பல்லி சகுணம் முக்கியப் பங்கு வகிக்கிறது. சங்க இலக்கியங்களில் பல்லி சகுணம் பற்றி குறிப்புகள் காணக்கிடக்கின்றன.

**"பகுவாய் பல்லி படுதொறும் பரவி**
**நல்ல கூறு என நடுங்கில்**
**புல்லென் மாலையொடுபொரு**
**கொல்தானே"** (அகநானூறு, பா.289)

என்று அகநானூற்றுப் பாடலும்,

**"நெடுஞ்சுவர்ப் பல்லியும் பாங்கிற்**
**நேற்றும்"** (நற்றிணை, பா.246)

என்று நற்றிணைப் பாடலின் வாயிலாகவும் பல்லி சகுணத்திற்குள்ள முக்கியத்துவம் வெளிப்படுகிறது.

சகுணம் பற்றிய நம்பிக்கை உலகெங்கும் காணப்படுகிறது. பண்டைத் தமிழர் இதனை புள், நிமித்தம் ஆகிய சொற்களால் குறிப்பிட்டுள்ளனர். நிமித்தம் என்பது வாழ்வில் நிகழவிருக்கும் நன்மை, தீமைகளை சில குறியீடுகள் வாயலாக உணர்த்து வதாகும். நிமித்தங்களை அனைத்தும் நம்பிக்கையின் பாற்பட்டன (சக்திவேல் நாட்டுப்புறவியல் ஆய்வு, ப.198). இந்நிமித்தத்தை நல்ல நிமித்தம், தீய நிமித்தம் என வகைப்படுத்தலாம். இதை சம்பூத்துமலை பழங்குடிகள் நல்ல சகுணம், கெட்ட சகுணம் என்று கூறுவர்.

**நல்ல சகுனங்கள்**

சம்பூத்துமலை பழங்குடிகள் பெண் பார்த்தல் முதுலான நற்காரியங்களுக்குச் செல்லும் பொழுது பானையில் நீர் எடுத்துக் கொண்டு எதிரே வருதல், வண்ணான் அழுக்குத் துணியுடன் எதிரே வருதல், நான்கு பேர் ஒன்றாகச் செல்லுதல், சிறுமியின் கம்மல், கொட்டு மேளச்சத்தம் கேட்டல், இறை வணக்கப் படையல் போடல், தூய உடையோடு கோயிலுக்குச் செல்பவர் எதிரே வருதல், மேற்குப் பக்கத்திலிருந்து பல்லி கத்துதல் முதலான செயல்கள் நடைபெற்றால் செல்கின்ற காரியம் வெற்றியடையும் என நம்புகின்றனர். மேலும் இறப்பு வீட்டில், பெண் எடுப்பது பற்றி பேசுவது, வீட்டின் கூரையின் மேலோ அல்லது வீட்டின் முன்பாகவோ காகம் கரைந்தால் உறவினர் என்று நம்புகின்றனர்.

**கெட்ட சகுணங்கள்**

நற்காரியங்களைப் பற்றிப் பேசும் போதும், நற்காரியங்களுக்குச் செல்லும் போதும் பாம்பைப் பார்த்தல், விறகுக் கட்டை கண்ணில் படுதல், சிறுவனின் கம்மல், எண்ணெய் எடுத்துக் கொண்டு எதிரே வருதல், அழுகைச்சத்தம், எங்கே போகிறாய் என வினவுதல், கூந்தலை விரித்துக் கொண்டு நிற்கும் பெண்களைப் பார்த்தல், நீரற்ற குடத்தோடு எதிரே வருதல், இரத்தக் காயங்களுடன் இருப்பவர்களைப் பார்த்தல், பூனை தெற்குப் பக்கமாகச் செல்லுதல், கனவில் பாம்பு துரத்துதல், வீட்டிலிருப்பவர் ஊருக்குச் செல்லும் போது தலைக்கு எண்ணெய் தேய்த்து நீராடல் மற்றும் வீட்டைச் சுத்தப்படுத்துதல் போன்றவை களைக் கெட்ட சகுனமாகக் கருகின்றனர்.

**பிறப்பு பற்றிய நம்பிக்கைகள்**

திருமணமான பெண்கள் விரைவில் தாய்மை அடைந்து விடவேண்டும் என விரும்புவர். குழந்தை இல்லையெனில் சமுதாயத்தின் தூற்றுதலுக்கு ஆளாக வேண்டுமே என எண்ணுவர். அதற்காக பெண்கள் "அரச மரத்தைச் சுற்றிவருதல் உண்டு. அரச மரத்தைச் சுற்றி வந்து அடி வயிற்றைப்

பார்த்தலாம்" (மேலது.177) என்று வழிபாடு மலட்டுத் தன்மையை போக்கவல்லது எனச் சங்கர்சென்குப்தா தமது நூல் ஒன்றில் குறிப்பிடுள்ளார்.

**மரணம்**

இப்பழங்குடி மக்கள் இறந்தவர்கள் ஆவியாக வருவார்கள் என்று நம்புகின்றனர். இதனால் இறந்தவரை புதைக்கும் போது அவரது வலது உள்ளங்கையையும் இடது உள்ளங்காலையும் கத்தியால் கீறிவிடுகின்ற னர். இவ்வாறு செய்தால் இறந்தவர் நடக்க முடியாமல் திரும்ப ஆவியாக வர மாட்டார் என்று நம்புகின்றனர். மேலும் சனிப்பிணம் துணை தேடும் என்பார்கள். சனிக்கிழமை ஒருவர் இறந்தால் அவருடன் கோழிக் குஞ்சையும் சேர்த்துப் புதைக்கும் வழக்கம் இம்மலையின மக்களிடம் தற்போதுவரை காணப்படுகிறது.

**விளைநிலங்களுக்குப் பூசை**

மலையில் ஒவ்வொரு ஊரிலும் பூசாரி இருப்பர். பூசாரியின் நிலத்தில் முதலில் ஏர் உழவு செய்த பிறகு முறையாக வழிபாடுகள் நடத்தப் பெற்ற பின்னரே ஊர் மக்கள் அனைவரும் அவர்களின் நிலத்தில் ஏர் உழவு செய்ய வேண்டும். அவ்வாறு பூசாரி வழிபாடு செய்யும்போது மக்கள் வெளியூர் களுக்குப் போகக் கூடாது. அடுப்பு மூட்டுதல், பயறு வேக வைத்தல், காட்டை அழித்தல் போன்ற செயல்களில் ஈடுபட்டால் சாமிக்கு ஆகாது என்று நினைக்கின்றனர். அவ்வாறு நிகழ்ந்தால் விளைச்சல் குறையும், பிற சாமியிடம் முறையிட்டு ஊர்த் தலைவர்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டும்.

சம்பூத்துமலைப் பழங்குடி மக்களில் பெண்கள் வயதுக்கு வந்தால் தண்ணீர் ஊற்றி, தீட்டுக் கழித்தப் பிறகே வீட்டிற்குள் உள்ளே விடுவார்கள். வயதுக்கு வந்த பெண்ணை அவ்வாறு முறையாகத் தீட்டுக் கழிக்கவில்லையெனில் குடும்பத்திற்கு ஏதாவது சிக்கல் ஏற்படும் என்று கருதுகின்றனர்.

மலையின மக்களிடம் பேய், பிசாசு குறித்த நம்பிக்கை அதிகமாக உள்ளது. பருவம் அடைந்த பெண்களையும், குழந்தை பெற்ற பெண்களையும் பேய் பிடித்துக் கொள்ளும் என்று பாதுகாப்பாக இருக்கின்றனர். இதனால் பருவம் அடைந்த பெண்கள் விரல்களில் இரும்பு மோதிரம் அணிந்து கொள்கின்றனர். பரும் அடைந்த பெண்களும், புதிதாகத் திருமணமான பெண்களும் மதியம், இரவு நேரங்களில் பூவைத்துக் கொண்டு வெளியில் போவதில்லை.

தெய்வம் தொடர்பான நம்பிக்கைகளில் மிகுந்த பயபக்தியுடன் திகழ்கின்றனர். பொய் சத்தியம் செய்தால் தெய்வம் தண்டித்துவிடும் என்று நம்புகின்றனர். இம்மலையில் இருக்கும் சிறுதெய்வங்கள் மிகச்சக்தி வாய்ந்ததாக இருக்கின்றன. இவ்வாறு சக்தியுடையதாக இருப்பதனால் மலையின மக்களுக்கு எவ்விதப் பாதிப்பும் இல்லாமல் வல்லமை உடையவராக இருக்கின்றனர். தீய எண்ணங்களுடன் வருபவர்களை இத்தெய்வம் தண்டித்து விடும் என்று நம்புகின்றனர். இவ்வாறு ஒவ்வொரு செய்பாடுகளும் வாய் மொழியாகக் கூறப்படுகின்ற செய்தியாகும்.

மலையில் ஏராளமாக மூலிகைகள் இருக்கின்றன. மற்றவர்கள் மூலிகைகள் பற்றிக் கேட்டால் வைத்தியம் பயன்படாது என்று நம்புகின்றனர். ஒவ்வொரு வியாதிக்கும் என்ன வகையான மூலிகைகளைப் பயன்படுத்துகின்றனர் என்று கேட்டால் இலையின் பெயரைச் சொல்ல மாட்டார்கள்.

**செய்வினை, வசியம் குறித்த நம்பிக்கைகள்**

மலையில் வசிக்கின்ற மக்கள் பொதுவாகச் செய்வினை, வசியம் பற்றித் தெரிந்து வைத்துள்ளனர். வேளாண்மை செய்துதான் தங்களுயை வாழ்வாதாரத்தைப் பேணிக்காக் கின்றனர். கிழங்குகள், பழங்கள், கீரைகள் ஆகியவற்றை உணவாக உட்கொள்வர். திருமணத்தின்போதும், வயதுக்கு வந்த பெண்ணுக்குச் சடங்கு செய்யும் போது அன்றாடம் உண்ணும் உணவில் இருந்து சற்று மாற்றம் ஏற்படுகிறது.

**முடிவுரை**

அன்றாடம் இடம்பெற்று இருப்பவையே பழக்கவழக்கங்கள் எனப்படும். பழங்குடி மக்களிடத்தும் பல்வேறு பழக்க வழக்கங்கள் அமைந்திருப்பதைக் காணமுடிகிறது. வழக்கம் என்பது ஒரு செயலின் பயிற்சி நிலையைக் குறிப்பதாகும். வாழ்க்கையின் தேவைகளை நிறைவு செய்வதாகப் பழக்க வழக்கங்கள் அமைகின்றன. மனிதனின் இயல்பான நடத்தையே பழக்கமாகக். அது காலப்போக்கில் வழக்கமாகவே மாறி விடுகிறது.

**துணைநூற்பட்டியல்**

1. சக்திவேல்.சு., நாட்டுப்புறவியல் ஓர் அறிமுகம், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1986.
2. லூர்து.தே., நாட்டாற் வழக்காற்றியல் ஆய்வுகள், பாரிவேள் பதிப்பகம், திருநெல்வேலி, 1987.
3. நல்லதம்பி.ச., தமிழகப் பழங்குடி வரலாற்றியல் கல்வராயன் மலைப்பழங்குடிகள்.
4. தமிழ்நாடன் (தொ.ஆ), தமிழ்நாட்டு மலைவாழ் வழங்குடி மக்கள், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சேலம், 1988.